Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

5(i)

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.V.M.ராஜேந்திரன் பி.இ.

ந.க.எண்.5156/2014/செம3 **நாள்.30.10.2015**

பொருள் கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம் - செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மாத்தூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.167/2pt, 168/1, 2pt, 4pt, 5pt; 177/1pt; 178; 179pt, 180/2pt, 3pt, 5pt, 6pt; 185/2pt -ல் அமையும் 9651.70 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையிடத்திற்கு மனை ஒப்புதலும், அம்மனையில் 17018.0 ச.மீ கட்டிட பரப்பில் அமையும் Block - I, II, III, IV மற்றும் V என ஐந்து பிளாக்குகளில் (Stilt + 4 floor) அமையும் 224 குடியிருப்புகள் கொண்ட கட்டுமான வரைபடங்களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளித்தல் - குறித்து.

பார்வை

1. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் நடவடிக்கைகள் நக.எண். 12645/2015/BA2, நாள்.24.07.2015
2. மனுதாரர் M/s.Arun Excello Homes Pvt Ltd அவர்களின் கடிதம் நாள்.30.12.2014
3. ஊராட்சி மன்றத் தலைவர், மாத்தூர் ஊராட்சி அவர்கள் கடிதம் நாள். 21.04.2015
4. அரசாணை (நிலை) எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.28.03.2012
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 7486/2009 பிஏ2, நாள்.16.04.2009
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 21075/09/ பிஏ1, நாள்.04.04.2012
7. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 12544/2014/சிபி, நாள்.04.07.2014
8. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 5013/2015/MP நாள்.19.03.2015
9. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 7221/2015/BA1 நாள்.01.06.2015
10. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள். 29.07.2015 (பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய கோரியது மற்றும் உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி செலுத்தக் கோரியது)
11. மனுதாரர் M/s.Arun Excello Homes Pvt Ltd அவர்களின் கடிதம் (ம) இணைப்புகள் நாள்.24.10.2015 & 26.10.2015 (பொது ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட விவரம் (ம) உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதி கட்டணத் தொகை, 6% காலதாம வட்டி, நன்னிலைவரி ஆகியன செலுத்தியதற்கான விவரம்)

****

.....2

For ARUN EXCELLO HOMES PVT. LTD.

Authorised Signatory

உத்தரவு

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மாத்தூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.167/2pt, 168/1, 2pt, 4pt, 5pt; 177/1pt; 178; 179pt, 180/2pt, 3pt, 5pt, 6pt; 185/2pt-ல் அமையும் 9651.70 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு கட்டுமானங்கள் கீழ்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

Area Statement

	Stilt floor	1st floor	IInd floor	IIIrd floor	IVth floor	Total m²	No.of. Units
Block -I	வாகன நிறுத்துமிடம் & Electrical & Driver Rest Room Toilet	788.93	788.93	788.93	788.93	3155.72	11x4=44
Block -II	வாகன நிறுத்துமிடம் & Electrical & Driver Rest Room Toilet	783.79	783.79	783.79	783.79	3135.16	11x4=44
Block -III	வாகன நிறுத்துமிடம் & Electrical & Driver Rest Room Toilet	783.79	783.79	783.79	783.79	3135.16	11x4=44
Block -IV	வாகன நிறுத்துமிடம் & Electrical & Driver Rest Room Toilet	867.28	867.28	867.28	867.28	3469.12	11x4=44
Block -V	வாகன நிறுத்துமிடம் Lumper, 2 nos, Toilet, Electrical & Driver rest room	1030.71	1030.71	1030.71	1030.71	4122.84	12x4=48
மொத்தம்						**17018.00**	**224**

மேற்கண்ட உத்தேச 224 குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன், பார்வை 1-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் முன்னிலை கடிதத்தில் கட்டிட அனுமதி வழங்க கட்டிட வரைபடங்களுக்கு **கவ/ந.ஊ.இ.எண்.130/2015** என எண்ணிட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

For ARUN EXCELLO HOMES PVT LTD.

Authorised Signatory

பார்வை 4-ல் கண்ட அரசாணையின்படி அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதி கட்டணம் மற்றும் நன்னிலை வரி ஆகிய கட்டணங்களை அரசுக்கு செலுத்தக்கோரியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இட அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யக் கோரியும் பார்வை 10-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பார்வை 11-ல் கண்ட மனுதாரரின் கடிதங்கள் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய I & A கட்டணம் **ரூ.63,93,750/-** (ம) 6% வட்டி ரூ.96,000/-, நன்னிலை வரி ரூ.23,500/- ஆகியவை செலுத்தப்பட்டதற்கான விவரம் (ம) பொது ஒதுக்கீடு திறவிடம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான தானப்பத்திர நகல் ஆகியன பெறப்பட்டுள்ளது.

மேற்படி உத்தேச மனையிடத்திற்கு **1 to 19** என எல்லையிட்டு **மவ/நஊதுஇ(செம) எண்.138/2015** என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் அமையும் குடியிருப்பு உபயோக கட்டுமான வரைபடங்களுக்கு **கவ/நஊதுஇ(செம)எண்.53('அ' to 'ஐ')/2015 (9 தாள்கள்)** என எண்ணிட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு உள்ளாட்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. பொது ஒதுக்கீடு திறவிடங்களை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்படவேண்டும்.
2. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
3. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
4. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

....4

For ARUN EXCELLO HOMES PVT. LTD.

Authorised Signatory

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

5. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set back) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச 224 குடியிருப்புகள் உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு வாய்க்காலின் குறுக்கே சிறுபாலங்கள் (Culvert) அமைக்க தேவைப்படின் உரிய துறையிடமிருந்து மனுதாரர் NOC பெற்றுக் கொள்ள வேண்டும்.
4. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்படவேண்டும்.
5. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்படவேண்டும்.
6. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
7. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
8. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்புச் சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
9. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
10. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
11. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

....5

For ARUN EXCELLO HOMES PVT. LTD.

Authorised Signatory

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

13. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

14. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water Act)-ன்படி மனுதாரர் மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.

15. கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு ஊராட்சி மன்றத் தலைவர், மாத்தூர் ஊராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகறது.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர், மாத்தூர் ஊராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

30.10.15

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ),
செங்கல்பட்டு-1

30/10/15 30/10/15

இணைப்பு
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு
(2 x 9 = 18)

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
மாத்தூர் ஊராட்சி,
திருப்பெரும்புதூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல்
M/s.Arun Excello Home Pvt Ltd
Bhattad Towers,
No.18, West Cott Road,
Royapettah, Chennai -14

For ARUN EXCELLO HOMES PVT. LTD.

Authorised Signatory

5(ii)

மாத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள், மாத்தூர் கிராமம்.

மாத்தூர் ஊராட்சி 602 105

முன்னிலை:

திரு. இரவி
தலைவர் / நிர்வாக அதிகாரி
மாத்தூர் ஊராட்சி

க.உ.எண்:3/2015
மு.மு.எண்:

நாள்:02.11.2015

பொருள்: கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம் - செங்கல்பட்டு மண்டலம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மாத்தூர் ஊராட்சி / கிராமம் - சர்வே எண்கள். 167/2 பகுதி, 168/1, 168/2 பகுதி, 168/4 பகுதி, 168/5 பகுதி, 177/1 பகுதி, 178, 179 பகுதி, 180/2 பகுதி, 180/3 பகுதி, 180/5 பகுதி, 180/6 பகுதி, 185/2 பகுதி -ல் அமையும் 9651.70 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையிடத்திற்கு மனை ஒப்புதலும், அம்மனையில் 17018.0 ச.மீ கட்டிட பரப்பில் அமையும் Block - I, II, III, IV மற்றும் V என ஐந்து பிளாக்குகளில் (Stilt +4 Floors) அமையும் 224 குடியிருப்புகள் கொண்ட கட்டிடங்களுக்கு கட்டுமான அனுமதி வழங்கப்பட்டது.

பார்வை -:

1. சென்னை - நகர் ஊரமைப்பு இயக்குநர் நடவடிக்கைகளின் செயல் முறைஆணை ந.க. எண். 12645/2015/ பிஏ2 நாள். 24.07.2015
2. ஊராட்சியின் சார்பாக உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானம் பெற்ற ஆவண எண்.3113/2015 நாள். 03.08.2015.
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கற்பட்டு அவர்களின் செயல் முறைஆணை ந.க. எண். 5156/2014/ செம3 நாள். 30.10.2015
4. மனுதாரர் தி/ள். அருண் எக்ஸெல்லோ ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் கடித நாள். 31.10.2015.

உத்திரவு:

தி/ள். அருண் எக்ஸெல்லோ ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான மாத்தூர் ஊராட்சி கிராம சர்வே எண்கள். சர்வே எண்கள். 167/2 பகுதி, 168/1, 168/2 பகுதி, 168/4 பகுதி, 168/5 பகுதி, 177/1 பகுதி, 178, 179 பகுதி, 180/2 பகுதி, 180/3 பகுதி, 180/5 பகுதி, 180/6 பகுதி, 185/2

For ARUN EXCELLO HOMES PVT. LTD.
Authorised Signatory

பகுதி -ல் அமையும் 9651.70 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையிடத்திற்கு மனை ஒப்புதலும். அம்மனையில் 17018.0 ச.மீ கட்டிட பரப்பில் அமையும் Block - I. II. III. IV மற்றும் V என ஐந்து பிளாக்குகளில் (Stilt + 4 Floors) அமையும் 224 குடியிருப்புகள் கொண்ட கட்டிடங்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியானது 02/11/2015 -ம் தேதி முதல் 3 வருடங்களுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.1.02.160/- (ஒரு லட்சத்து இரண்டாயிரத்து நூற்று அறுபது மட்டும்) செலுத்தியமைக்கான பல வகைப்பட்ட ரசீது எண்.12151 நாள். 02/11/2015 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரை படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

நிபந்தனைகள்:

1. கட்டிடத்தின் முன்பக்கத்தில் 3 மீட்டருக்கு குறையாமலும். பின் பகுதியிலும் 3 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 3 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994-ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுபாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமனம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்யவரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரை படங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரை படங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு உரிமை உண்டு.
7. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.
8. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.
9. கட்டிடம் தொழிலகங்களுக்காவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்பட்ட விருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலர் தொழிலகங்களின் ஆய்வாளர் மற்றும் உறுப்பினர் செயலர். சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஆகியோரிடமிருந்து அனுமதி பெற்றிருந்தல் வேண்டும்.

For ARUN EXCELLO HOMES PVT. LTD.

Authorised Signatory

10.அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

11.கட்டிட வேலைமுடித்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள்ளாக தலைவர் / நிர்வாக அதிகாரி அவர்களுக்கு கடிதம் மூலமாக தெரிவிக்க வேண்டும்

தலைவர்
மாத்தூர் ஊராட்சி
ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம்

ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம் * காஞ்சிபுரம் மாவட்டம் * மாத்தூர் ஊராட்சி 602 105

தலைவர் / நிர்வாக அதிகாரி
மாத்தூர் ஊராட்சி
ஸ்ரீபெரும்புதூர் தாலுகா.
காஞ்சிபுரம் மாவட்டம்.

பெறுநர்.
அருண் எக்ஸெல்லோ ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட்
பட்டாட் டவர்ஸ், நெ.18, வெஸ்ட்காட் ரோடு.
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

For ARUN EXCELLO HOMES PVT. LTD.

Authorised Signatory



our services doesn’t just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate